2005 ஏப்ரல் 12]

(ஊ) செங்கல்பட்டு குடிநீர் பிரதான குழாய் உடைந்ததால் மாற்று ஏற்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. ஆறுமுகம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு நீரேற்று நிலையத்தின் பிரதான குழாய் உடைந்ததால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் வழங்கல் பணிக்காக பாலாற்றுப் படுகையில் அமைந்துள்ள ஒழலூர், பழவேலி, திம்மாவரம் ஆகிய மூன்று தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து தினந்தோறும் முறையே 4.20 இலட்சம், 26.50 இலட்சம், 4.30 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது திம்மாவரம் நீரேற்று நிலையத்திலிருந்து வரும் குடிநீர் பிரதான குழாய், சென்னை–திருச்சி புறவழிச் சாலையில், காஞ்சிபுரம் சாலை சந்திப்பில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தின் சறுக்குப் பகுதியில் (Ramp) 28–2–2005–ல் உடைப்பு ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட கசிவினால், அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் பாதிப்பு ஏற்பட்டது. எனவே, அவசர அவசியம் கருதி, குடிநீர், நீர் உந்துப் பணி நிறுத்தப்பட்டு, மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில், 180 மீட்டர் நீளத்திற்கு 200 எம்.எம். விட்டமுள்ள சீ.ஐ. நீர் உந்துக் குழாய், தேசிய நெடுஞ்சாலையில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்திற்கு அடியில் செல்வதால், அதனை உடனடியாகப் பழுதுபார்க்க முடியாது எனக் கண்டறியப்பட்டதால், செங்கல்பட்டு நகரில் குடிநீர் வழங்கல் பணி பாதிக்காத வகையில், பழவேலி நீரேற்று நிலையத்திலிருந்து வரும் குடிநீர் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி குடிநீர் லாரிகள் மூலமும் குடிநீர்

வழங்கப்பட்டு வருகிறது. எனவே, திம்மாவரம் நீரேற்று நிலையத்தில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக நகராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்கல் பணியில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மேலும் பாதிக்கப்பட்ட குழாய்கள் 35 ஆண்டுகள் பழமை வாய்ந்ததால், தற்போது புதிதாக திம்மாவரம் நீர் உந்துக் குழாய்களை 180 மீட்டர் நீளத்திற்கு மாற்று வழியில் கொண்டு செல்ல ரூ.5.25 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 16–3–2005–ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதிலே 16–3–2005 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும், இது மிக விரைவில் முடிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரதான குழாய் உடைந்து ஏறக்குறைய இரண்டரை மாதங்கள் தாண்டிவிட்டன. பல முறை அதிகாரிகளிடம் சொல்லியும், அதற்காக டெண்டர் வைத்துத்தான் பணி செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதுபோன்ற அவசரத் தேவைக்கான பணிகளுக்குக்கூட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பிறகுதான் பணியைத் தொடங்கவேண்டும் என்று சொன்னால், அந்தப் பகுதியிலே ஏறக்குறைய பத்து வட்டங்களிலே தண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டு, அங்கு மக்களே போராடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இன்னும்கூட முடியாத நிலையில் இருக்கிறது. இன்னும் ஒரு வார காலமாவது ஆகும் என்று சொல்கிறார்கள். இது இன்னும் எத்தனை நாட்களிலே முடியும்? இதுபோன்ற பிரச்சினைகள் எதிர்காலங்களிலே வருகிறபோது, போர்க்கால நடவடிக்கையாக, ஒப்பந்தப்புள்ளி கோராமலே உடனடியாகப் பணியைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா? செங்கல்பட்டுக்கு மட்டுமல்ல, அனைத்துப் பகுதிகளுக்கும் இதுபோன்று ஆணையிடுவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பிரதான குழாயானது 35 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கே நிறுவப்பட்டது. பழமை வாய்ந்தது. அங்கே அந்தக் குழாய் உடைப்பின்

காரணமாக அந்த செங்கல்பட்டு நகரத்திற்கு வழங்கப்பட்டிருந்த தண்ணீருடைய அளவைக் குறைக்காமலேயே, மாற்று வழியின்மூலமாக அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் இன்றையதினம் நல்ல நிலையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அந்தக் குழாய் வழியாகத் தண்ணீர் செல்லாத பகுதிகளுக்கு லாரிகள் வழியாகத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. முன்பு 55 லிட்டர் வீதம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது 49 லிட்டர் வீதம் கொடுக்கப்படுகிறது. இப்படித் தண்ணீர் கொடுக்கின்ற வாய்ப்பு இல்லையென்றால் அதைப் போர்க்கால அடிப்படையிலே, அங்கே டெண்டர் விடாமலேயே அந்தப் பகுதியில் குழாய் மாற்றுவதற்குண்டான ஆவன செய்து இருக்கலாம். தண்ணீரை அங்கே முறையாகக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால்தான், அந்தப் பகுதியிலே அந்தக் குழாய் மாற்றத்திற்காக டெண்டர் விடப்பட்டு, இன்றையதினம் அந்தப் பணியானது வேகமாக நடைபெற இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்,

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரதான குழாய் உடைந்ததைப்போல் இன்னும் பல பகுதிகளிலே இதுபோன்ற நிலைமை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஏனென்று சொன்னால், பாலாற்றிலே வருகிற அந்த வழியிலே நிறைய மணல் எல்லாம் அள்ளுகிறார்கள். திருட்டுத்தனமாக மணல் அள்ளுகிறார்கள். அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தினால்தான், எதிர்வரும் காலங்களிலே இதுபோன்று குழாய்கள் உடையாமல் இருக்க வாய்ப்பு இருக்கும். ஏற்கெனவே ஒழலூரிலே இருக்கின்ற கிணறுகள் எல்லாம் வற்றிவிட்டன. இப்போது இருப்பது பழவேலி, அதையடுத்து திம்மாவரம் மட்டுமே. இந்த நிலைமையை ஒட்டுமொத்தமாகக் கண்காணித்தால் மட்டுமே, ஒட்டுமொத்தக் குடிதண்ணீரை செங்கல்பட்டு நகருக்கு வழங்க முடியும் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வாரா, அதற்கான தகுந்த வழிமுறையை ஏற்படுத்துவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று,—அந்த மணல் எடுக்கின்ற பகுதிகளில் எல்லாம் இன்றையதினம் அரசு நிர்ணயித்த இடம் போக மீதி இடத்தில் மணல் எடுக்கின்றார்கள் என்றால்—உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, அந்தப் பகுதி மக்களுக்கு என்றென்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த வழியிலாவது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே குடிநீர் கொடுத்துக் கொண்டிருப்பார் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் கூட்டுறவு குறித்த 32–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து ஒன்பதாவது முதல் நூற்று எண்பத்து ஐந்தாவது வரையிலான 7 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS